1995 ஏப்ரல் 18]

மீறிப் பேசியதாகச் சொல்கிறீர்கள். விதியை மீறி 3-வது கேள்வி நீங்கள் எப்படிக் கேட்க முடியும்? விதிப்படி இரண்டு துணைக் கேள்விகள்தான் கேட்க முடியும். உட்காருங்கள்.

வினா எண் 334, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

334—

பெண்கள் தொழில் நுட்பக் கல்லூரி அமைத்தல்

27200—டாக்டர் மு. **அம்மமுத்து பிள்ளை :*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் பெண்களுக்கு என்று தனியாக தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றும் கலைக் கல்லூரி ஒன்றும் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் படித்தவர்கள் அதிகமாக வாழ்கின்ற ஒரு மாவட்டம். குறிப்பாக பெண்கள் கல்வியில் இன்று தமிழகத்தில் முதலிடம் வகித்து வருகிறது. ஆனால், இங்கு அரசால் இதுவரை ஒரு கல்லூரியும் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெண்களுக்கு என்று தனியாக தொழில் நுட்பக் கல்லூரி அமைத்துத் தர மறுபரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் 6 தொழில் நுட்பப் பயிலகங்கள் இருக்கின்றன. இந்த ஆறும் அங்கே இருக்கின்ற மாணவ மாணவிகளுக்கு பயன்படுகின்ற வகையிலே இருக்கின்றன என்று குறிப்பு தந்திருக்கிறார்கள். ஆகவே, அரசின் சார்பில் அங்கே பல்தொழில் பயிலகம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.*

[*1995 ஏப்ரல் 18*

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் அறிவொளி திட்டம் என்று அமல்படுத்தப்பட்டு இன்று கன்னியாகுமரி மாவட்டம் முழு எழுத்தறிவு பெற்ற ஒரு மாவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், நான் ஏற்கெனவே கூறியதுபோல, இங்கு அரசால் நடத்தப்படும் கல்லூரிகள் ஒன்றும் இல்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நல்லாட்சியில் இன்று குமரி மாவட்டத்திற்கு, தோவாளை ஒன்றியத்தில் *400* கோடி ரூபாய் செலவில் ஒரு ரப்பர் தொழிற்சாலையும், அகஸ்தீஸ்வரம் ஒன்றியத்திற்கு தென்னையினால் செய்யப்படும் பல்வேறு தொழில்களுக்காக *20* கோடி ரூபாயும் அனுமதி அளித்ததற்கு குமரி மாவட்ட மக்கள் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கிக் கொண்டு, அமைச்சர் அவர்கள் தொழில் நுட்பக் கல்லூரி ஆரம்பிக்க சாத்தியக்கூறுகள் இல்லையென்று கூறினாலும், பெண்களுக்காக அரசு கலைக் கல்லூரி ஒன்றையாவது அமைத்து, அதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் திருநாமத்தை அக் கல்லூரிக்கு வைத்து சிறப்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் ஆடவர் கல்லூரிகள் *8*-ம், தனியார் மகளிர் கல்லூரிகள் *4*-ம், நிதியுதவி பெறாத தனியார் கல்லூரிகள் *3*-ம், ஆக *15* கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இந்த நிலையில், அங்கே அரசு கலைக் கல்லூரி அமைக்க வேண்டுமென்ற அவசியம் எழவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே கலைக் கல்லூரி ஒன்று தொடங்க வேண்டுமென்ற ஆர்வத்தில் இருந்தால், சுயநிதிக் கல்லூரிகள் தொடங்குவதற்கு அங்கு இருக்கும் ஏதாவது ஒரு கல்வி முகமை ஏற்பாடு செய்யுமானால் அரசு அதை தேவையின் அடிப்படையிலும், அதன் தன்மையின் அடிப்படையிலும் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *335*, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.